MISSION PRESS 1840

# சர்வவியாபி
SARVAVIABI

10-06-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் வைகாசி 27 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 22
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச்

## நமது பேராயர் மேதகு அந்தோணி ஆனந்தராயர்

### ஆண்டகை அவர்களின் பெயர் கொண்ட விழா

(13-6-2018)





**புனிதரின் பெயர்கொண்ட விழாவை முன்னிட்டு நமது பேராயர் அவர்களுக்கு நமது உயர் மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவர் பெயராலும் செபங்கலந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

## திருநற்கருணை மட்டுமே நம் இதயங்களைத் திருப்திபடுத்தும்

**வா**ழ்வின் உணவாகிய கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திரு இரத்தம் மட்டுமே, அன்புகூரப்பட வேண்டும் என்ற நம் இதயங்களின் பசியை திருப்திபடுத்த இயலும் என்று, கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தம் பெருவிழா திருப்பலியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். உரோம் நகருக்கு தென்மேற்கே ஏறத்தாழ முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கடற்கரை நகரமான ஒஸ்தியாவில், புனித மோனிக்கா பங்குத்தள ஆலய வளாகத்தில், இஞ்ஞாயிறு மாலையில், கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தம் பெருவிழா திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வாழ்வில், உணவினால் மட்டுமல்லாமல், திட்டங்கள், பாசம், நம்பிக்கைகள், ஆசைகள் போன்றவற்றாலும் நாம் தொடர்ந்து ஊட்டம்பெற வேண்டியுள்ளது என்று கூறினார்.

அன்புக்காக ஏங்கும் நம் பசியை, மிகச் சிறந்த நன்கொடைகளும், மிக நவீன தொழிநுட்பங்களும் ஒருபோதும் முழுமையாகத் திருப்திபடுத்த முடியாது என்று, இத்திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை, திருநற்கருணை, அப்பம் போன்று சாதாரணமாகத் தெரிந்தாலும், அந்த உணவு மட்டுமே நம்மைத் திருப்திபடுத்தும், இந்த அன்பைவிட பெரிய அன்பு வேறு எதுவும் இல்லை என்று உரைத்தார். திருநற்கருணையில் நாம் இயேசுவைச் சந்திக்கிறோம், அவரின் வாழ்வைப் பகிர்ந்துகொள்வோம். அவரின் அன்பை உணர்கிறோம், இந்த வாழ்வின் உணவைத் தேர்ந்துகொள்வோம், திருப்பலிக்கு முன்னுரிமை கொடுப்போம். நம் குழுக்களில் திருநற்கருணை ஆராதனையை நடத்துவோம், கடவுள் நமக்காகத் தயார் செய்து வைத்துள்ளதைப் பெறுவதற்குத் தணியாத ஆவலுடன், கடவுளுக்காக பசியெடுக்கும் அருளைக் கேட்போம் என்றும் திருத்தந்தை கூறினார்.



திருநற்கருணையில், இயேசு நமக்காக ஓர் இடத்தையும், உணவையும் தயார் செய்து வைத்திருக் கிறார். அதே நேரம், இயேசு தம் சீடர்களையும், தயார் செய்யுமாறு கூறுகிறார் என்றுரைத்த திருத்தந்தை, புறக்கணிப்பு மற்றும் ஏமாற்றுச் சுவர்களைத் தகர்த்தெறி யுமாறு கேட்டுக்கொண்டார்.

இத்திருப்பலிக்குப் பின்னர், ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திற்கு, திருநற்கருணை பவனியையும் தலைமை யேற்று நடத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1968ம் ஆண்டில், அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திரு இரத்தம் பெருவிழா திருப்பலியை ஒஸ்தியாவில் நிறைவேற்றிய தற்குப் பின்னர், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2018ம் ஆண்டில் அங்கு நிறைவேற்றியுள்ளார்.

**YOUR GRACE, HAPPY FEAST DAY TO YOU,**

# தூத்துக்குடி ஆயரின் கண்டனமும், கண்ணீர் அஞ்சலியும்



ஸ்டெர்லைட் ஆலையை எதிர்த்து கடந்த 100 நாள் களாக தூத்துக்குடி நகரையும் புறநகரை யும் சார்ந்த பல ஆயிரம் மக்கள் எந்த விதமான வன்முறைச் சம்பவமும் இல்லாமல் அமைதியாக அறவழியில் போராடி வந்துள்ளனர். நேற்று (மே 22) ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் எண்ணத்தோடு இலட்சக்கணக்கான மக்கள் சென்றபோதும் கூட மக்கள் எந்த வன்முறைக்கும் இடமளித்தது கிடையாது. அப்படியானால் மக்களுக்கு எதிராக இந்த வன்முறையைத் தூண்டியது யார்? என்ற கேள்வி எழுகின்றது. நேற்றும் தங்களுடைய வாழ்வுரிமைக்காகப் போராடிய அப்பாவி மக்கள் மீது எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்தி பல உயிர்கள் இழப்புக்கு காரணமா யிருந்தவர்களை நாங்கள் மிக மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்கள் மீது துறைசார்ந்த நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கின்றோம்.

தங்களின் சொந்தங்களை இழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவிக்கின்றோம்.

**மேதகு இவோன் அம்புரோஸ்**
தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்
மற்றும் குருக்கள், இருபால் துறவியர்
இறைமக்கள், தூத்துக்குடி.

---

ஆசிரியர் பேனா...

# அலட்சியமே இலட்சியத்திற்கு கேடு

தலையங்கம்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு இலட்சியம் உண்டு. நல்ல மருத்துவராக, நல்ல பொறிஞராக, நல்ல வழக்கறிஞராக, நல்ல குருவாக - இப்படி ஏதாவது ஒரு துறையில் இலக்கு வைத்து நகர்கிறது வாழ்க்கைப் பாதை. இலக்கு நோக்கிய இப்பயணத்தில் உறுதிப்பாடு தேவை. இலக்கும், அதை எட்டுவதற்கான உறுதிப்பாடும், முயற்சியும், உழைப்பும் அலட்சியப்படுத்தப்படும் பொழுது, இலக்கு தளர்வுறுகிறது, மங்கலாகிறது, மழுங்கடிக்கப்படுகிறது.

**இந்த இலக்கு நோக்கிய பயணம்** இல்லத்தில் தொடங்கு கிறது, பெற்றோரில் தொடங்குகிறது; உறவுகள், நண்பர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகளால் இது ஊட்டமும் உற்சாகமும் பெறுகிறது; அல்லது இவர்களால் திசைமாற்றம் செய்யப் படுகிறது. இந்த திசைமாற்றம் இடம்பெறும் வேளையிலே, இலக்கை கண்முன் கொண்டுள்ள இளம் உள்ளம் தடு மாற்றம் அடைவதைவிட, தனது இலக்கு சரிதானா? அதற் கான என்முயற்சிகள் போதுமானதா? என்ற கேள்விகளுடன் ஆன்ம பரிசோதனை செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறது. இங்கும் பெற்றோரும் மற்றவர்களும் உதவ வேண்டிய கட்டாய கடமை பிறக்கிறது.

**பிள்ளைகளின் மேல் பெற்றோர் தங்கள் அபிலா சைகளை** சுமத்தல் கூடாது. தன் பிள்ளையின் திறமையும் ஆர்வமும் என்ன என்பதை இவர்கள் கண்டறிய வேண்டும். இங்குதான் இலக்கை தேர்ந்தெடுப்பவரும் பெற்றோரும் மற்றவரும் இறைதிருவுளத்தின் உதவியை நாடவேண்டும். செபம், திருப்பலி, திருவழிபாட்டு உதவியுடன் தீர்க்கமான முடிவெடுப்பது சாலசிறந்தது.

**இலக்கு என்பது ஒரு நிலை.** இந்த நிலை பலவாறாக நம்முன் விரிந்து பரந்து கிடக்கின்றது. தேர்ந்த இலக்கில், "தூண்டில் போட்டவன் கண் தக்கையின் மேலே" என்பது போல இடைவிடாது கண்வைத்து, கவனம் வைத்து முயற்சியையும் முன்னெடுப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். சிறிது பின்னடைவும் கூட மனஉறுதியை தளர்வுறச் செய்யக்கூடும்.

**எத்தனை எத்தனை இடர்கள்** இந்த மானிட வாழ்வில்! எல்லாவற்றையும் சந்தித்துதான் ஆகவேண்டும். பெரும் சுவராக நிற்கும் தடைகள்கூட, இறை திருவுளத் தாலும், அலட்சியமற்ற உழைப்பாலும் தவிடுபொடியாகும், வழிவிட்டு ஒதுங்கிப்போகும். இத்தகைய நம்பிக்கை மிக முக்கியமானது. தடைகளைத் தாண்டி சாதிக்கும் பொழுது ஏற்படும் உணர்வும் மகிழ்வும் அலாதியானது.

கோடைக் காலம் முடிந்து பள்ளிகள் தொடங்கிவிட்டன. நிறுவனங்கள் இலக்கு நிர்ணயிக்கிறது; ஆசிரியர்கள், மாணவர்கள் இலக்கு வைத்து உழைக்க வேண்டும். ஒவ்வொரு மணித்துளியும் விலையுயர்ந்த மணி போன்றது. கடந்து போகும் ஒரு நொடியைக்கூட நாம் திரும்ப பெற இயலாது. அன்றன்றைய தொல்லை அன்றன்றைக்குப் போதும் என்றார் இயேசு. அன்றன்றைய பணியை, பாடத்தை அன்றன்றைக்கு முடிக்க வேண்டும். இடைவிடா இந்த இயக்கம் வெற்றிக்கு இட்டுச் செல்லும், நமது இலக்கை நாம் அடையச் செய்யும்.

**இலக்கினை அடைவதற்கு** பல படி நிலைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். இந்த படிநிலைகள் உயர்வுக்கு இட்டுச் செல்லும் திறம் வாய்ந்தவை. தேர்வையும், தேர்வில் சந்திக்கும் ஒவ்வொரு கேள்வியையும் கவனமுடன் மேற் கொள்வது அறிவுடைமை. இந்த படிநிலைகளில் ஏற்றிவிடு பவர்கள் நம் பெற்றோரும் ஆசிரியரும்தான் என்ற நம்பிக்கையை அவர்களில் இருத்த வேண்டும். எந்த ஒரு மாணவரும் தோல்வியுற விரும்புவதில்லை; அதைப் போலவே, ஒவ்வொரு மாணவரும் தனது முழு திறனையும் ஆற்றலையும் நினைவாற்றலையும் "வெற்றிபெற வேண்டும் என்ற" உறுதிப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும்.

**முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.** முயற்சியில் தளர்வு ஏற்பட்டால் அதைத்தான் அலட்சியம் என்கிறோம். "இது என்ன பெரிய காரியம்!", "இது என்னால் முடியாதா என்ன", "நாளைக்கு பார்த்துக் கொள்ளலாம்", "நான் ஒரே ஒரு முறை படித்தால் போதும், அப்படியே அது என் நினைவில் இருக்கும்", (என்ற அதிகப்படியான நம்பிக்கை) ஆகிய வார்த்தைகளை மாணவ மாணவியரிடம் கேட்கும் பெற்றோ ரும் ஆசிரியரும் விழித்துக்கொள்ள வேண்டும்; ஏதோ ஒரு வகையில் இந்த மாணவனுக்கு ஒரு மனத்தளர்வு தோன்று கிறது; அலட்சியம் நிலவுகிறது என்று புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ப இவர்களும் செயல்பட வேண்டும். மாணவ பருவத்தில் இந்த அலட்சியம் எல்லோரும் ஏதாவது ஒரு கட்டத்தில் அனுபவப்பட்டிருப்பார்கள். இதனால் நிகழ்ந்த பெருத்த அடி (அ) பின்வாங்கல் எத்தனை வயதானாலும் மறப்பதில்லை.

கடந்த காலவாழ்வு நம் பாடமாகட்டும். நமது பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அதிகாரிகளின் அனுபவங்கள் நம் பாடமாகட்டும். அலட்சியத்திற்கு ஒருபோதும் இடம் தரலாகாது. அலட்சியமே இலக்கிற்கு கேடு. ●

ஆண்டின் பொதுக்காலம் 11-ஆம் ஞாயிறு(17-06-2018) எசே.17:22-24 2கொரி.5:6-10 மாற்கு 4:26-34.

வாரச் சிந்தனை

# "சிறிய நன்மைத்தனம் பெரிய மாற்றம்"

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



**கடவுளின் இறையாட்சி:** இன்றைய நற்செய்தியில் இயேசு விண்ணரசின் வளர்ச்சியை மிகவும் சிறியதாகக் கருதப்படும் கடுகு விதையுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். இந்த கடுகு விதை உவமையானது ஒத்தமைவு நற்செய்தி ஏடுகள் அனைத்திலும் காணப்படுகிறது. கடுகு விதை என்பது மிகவும் சிறியது என்றும் அதனுடைய உண்மையான அளவு மற்ற விதைகளைக் காட்டிலும் மிகவும் சிறியது என்பதை மாற்கு நற்செய்தியாளர் தெளிவுபடுத்துகிறார், அதாவது சுமார் 0.75 அங்குல நீளம் மட்டுமே கொண்டது. இயேசு இந்த உலகில் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது, போதித்தது, செயல்பட்டது அனைத்துமே ஒரே நோக்கத்தை கொண்டதாக அமைகிறது. இறையாட்சியை, விண்ணரசை பற்றி மக்களுக்கு போதிக்கவே வந்தார். எவ்வாறு கடுகு விதையானது நிலத்தில் விதைக்கப்படுகிறதோ, அதே போன்று இறையாட்சியும் இந்த மக்களுக்கு இயேசுவின் செயல்பாடுகளால் விதைக்கப் படுகிறது. கடுகு விதை மற்ற விதைகளைக் காட்டிலும் எடையிலும் அளவிலும் சிறியதாகக் கருதப்பட்டாலும் அது வளர்ந்து, செடியாகி, மரமாக மாற்றம் பெறும்போது வானத்துப் பறவைகள் அனைத்தும் வந்து அதனில் இளைப்பாறும், மகிழ்ச்சியை சுவைக்கும்.

இதன் அடிப்படையில் இறையாட்சி மக்களின் பார்வைக்கு துவக்கத்தில் சிறியதாக கடுகுவிதைப் போன்று தோன்றி னாலும் காலங்கள் செல்ல செல்ல மிகவும் வளர்ச்சி பெற்று முடிவில் உலக மக்கள் அனைவரையும் தன்பால் ஈர்த்துக் கொள்ளும் என்பதை இன்றைய நற்செய்தியில் வாசிக்கி றோம். இதைத்தான் ஆண்டவர் இயேசு மாற்கு.1:15ல் "காலம் நிறைவேறிவிட்டது இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று தனது பணி வாழ்வை தொடங்கும் போது முதல் வசனமாக பயன் படுத்தினார் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

**முதல் வாசக பின்னணியில்:** இறைவாக்கினர் எசேக்கியேல் இஸ்ரயேல் மக்கள் பாபிலோனில் அடிமைத் தனத்தில் இருந்தபோது வாழ்ந்தவர். இஸ்ரயேல் மக்கள் நெபுகத்னேசர் மன்னரால் எண்ணற்ற துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அதே நேரத்தில் பாபிலோன் அரசு அன்றைய காலத்தில் மிகவும் வலிமை வாய்ந்த அரசாக இருந்தது. அதனை எதிர்த்து யாரும் நிற்க முடியாத அளவிற்கு அது பலம் பொருந்தியதாக திகழ்ந்தது. இந்நிலை யில் தான் கடவுள் நம்பிக்கைத் தரும் வாக்குறுதியாக "நான் ஓங்கிய மரத்தை தாழ்த்தி, தாழ்ந்த மரத்தை ஓங்க செய்வேன்" என்று கூறி "நான் செய்து காட்டுவேன்" என்றும் கூறுகிறார். இது வரலாற்றில் நடைபெற்ற ஒன்றாகவும் மாறிபோனது. வலிமையான பாபிலோனிய அரசு சுக்கு சுக்காக நொறுங்கிப்போனது. ஆனால் இஸ்ரயேல் மக்கள் விடுதலை பெற்று எருசலேமை மீண்டும் கட்டியெழுப்பி தழைத் தோங்கினர். இஸ்ரயேல் மக்கள் சிறிய இனமாக இருந்தாலும் கூட மிகப்பெரிய வலிமை வாய்ந்த பாபிலோனிய அரசு அழிந்துபோனது. இதிலிருந்து நாம் கடவுள் எதிர்ப்பார்க்காத மிகச் சிறிய நபர்களில், நிகழ்வுகளில், பொருட்களில் கூட பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் அளவுக்கு ஆற்றலும் வலிமையும் உள்ளவராக இருக்கிறார் என்பதை அறிகின்றோம்.

**பலவீனத்தில் பலம்:** நாம் நம்மைச் சுற்றி அன்றாடம் நடைபெறும் நிகழ்வுகளை சற்று கூர்ந்து நோக்கினால் கடவுள் அவற்றின் வாயிலாக எப்படி செயலாற்றுகிறார் என்பது புலப்படும். இன்று கடவுள் அருங்கொடை செபக் கூட்டங்களிலும், புதுமை நடைபெறும் இடங்களில் மட்டுமே இருக்கிறார் என நினைத்து மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. ஆனால் கடவுளை எல்லா நபர்களிலும், இடங்களிலும், பொருட்களிலும் கண்டுணரக் கூடிய பார்வை நமக்கு வேண்டும். மாற்கு நற்செய்தியாளர் இன்றைய நற்செய்தியை அன்று உரோமை அரசால் வேதகலாபனைக்கு உட்படுத்தப் பட்ட மக்களை கருத்தில் கொண்டு எழுதுகிறார். கிறிஸ்தவ சமூகம் எண்ணிக்கையில் மிகச் சிறியதாக இருந்தாலும் கூட அவர்களது இறைநம்பிக்கை மிகப் பெரியது, அது வளரக் கூடியது, பரவக்கூடியது. இன்றைய துன்பங்கள் யாவும் வரும் காலத்தில் மகிழ்ச்சியாக மாறும். காரணம், இயேசுவின் உடனிருப்பு அவர்களை என்றும் வழிநடத்துகிறது. இதற்கு தூய பவுலடியார் உதாரணமாக உள்ளார். இயேசு பவுலடியாருக்கு கூறியது போல "என் அருள் உனக்கு போதும், வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்" (2கொரி.12:9) என்ற வார்த்தை, நமது பலம் கிறிஸ்துவே என்பதை உணர்த்துகிறது. இவ்வாறு மனித பலவீனத்தில்தான் கடவுளின் பலம் அடங்கியிருக்கிறது என்பதை யாராலும் மறுக்க இயலாது.

**சிறிய நன்மைத்தனம் பெரிய மாற்றம்:** கடுகு விதை மிகச்சிறியதாக இருந்தாலும் கூட அதன் காரம் குறையாது என்பது போல நாம் எதையும் அளவில் சிறியதாக நினைத்து புறந்தள்ளிவிடக்கூடாது. மாறாக கடவுள் அவற்றிலிருந்தும் கூட நன்மைத்தனங்களை வெளிக்கொணர்வார். கடுகு விதையானது சிறிய விதையாக இருந்தாலும் வளர்ந்த பிறகு பல்வேறு பறவைகள் வந்து தங்குவதற்கு தன்னையே கொடுக்கிறது. இதே பணியைத்தான் செய்ய நாமும் சிறப்பாக அழைக்கப்பட்டுள்ளோம். நம்முடைய செயல்பாடுகள், படிப்பினைகள் மக்களுக்கு இறையாட்சியை கொடுப்பதாக அமைய வேண்டும். நாம் இருக்கக்கூடிய இடத்திலேயே நம்முடைய சிறிய சிறிய நற்செயல்களால் கிறிஸ்து என்ற மணத்தினை பரப்ப வேண்டும். இதன் மூலம் கிறிஸ்தவர் களாகிய நாம் இந்த சமுதாயத்தில், நாட்டில் புதிய மாற்றங்களைக் கொண்டுவரும் கருவிகளாக மாற முடியும். "நான் ஒன்றுக்கும் உதவாதவன்", "என்னால் ஒன்றும் செய்ய முடியாது", "நீதியும், அமைதியும், மகிழ்ச்சியும் வாழ்க்கை யில் எட்டாத கனிகள்" போன்ற தாழ்வு உணர்வுகள் நமக்குள்ளிருந்தால் அவற்றை உதறித் தள்ள வேண்டும். "நாம் கடவுளின் வேலைப்பாடு: நன்மைகள் செய்வதற் காகவே இயேசு கிறிஸ்து வழியாக படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் செய்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்" (எபே.2:10) என்று மனதில் கொள்வோம். நான் செய்கின்ற சிறிய நன்மைத் தனமும் இந்த உலகில் பெரிய மாற்றத்தை உருவாக்கும் என்பதை உள்ளத்தின் ஆழத்தில் பதிப்போம்.●

---

## உப்பளம், தூய சவேரியார் மேய்ப்புப்பணி மையத்தில், குணமளிக்கும் நற்செய்தி ஆராதனைக் கூட்டம்

நாள் : **16-06-2018 (சனிக்கிழமை)**

நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை

இடம்: **புனித சவேரியார் மேய்ப்புப் பணி & கலைத்தொடர்பு நிலையம்.**

(புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வளாகம்) நேத்தாஜி நகர்-1, உப்பளம், புதுச்சேரி-1)

**நடத்துபவர்:** அருட்தந்தை **ஜேக்கப்**
பங்குத்தந்தை, சோகண்டி, செங்கல்பட்டு மறைமாவட்டம்.

***அனைவரும் கலந்துகொண்டு இறை ஆசீர் பெற அழைக்கின்றோம்.***

இவண், அருட்தந்தை **பிலோ**
இயக்குநர், மற்றும் மைய செப தயாரிப்பு குழுவினர்
புனித சவேரியார் மேய்ப்புப்பணி & கலைத்தொடர்பு நிலையம், புதுச்சேரி.

**தொடர்புக்கு:** 9443244787 / 9750365723 / 9842333363



# இறங்கி வந்து நெருங்கி வந்த உறவு

ME

8

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**நமது ஆண்டவர் இயேசு செய்த மன்றாட்டு:** இயேசு ஒரு யூதர் என்ற முறையில் பல முறை திருப்பாடல்களைச் செபித்திருக்கிறார். அவரே நமக்கும் செபிக்கக் கற்றுக்கொடுத்திருக்கிறார். அந்தச் செபம் நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் அதே செபத்தை எப்போதும் திரும்பத் திரும்பச் சொல்லவில்லை. இங்கு அவரே பல்வேறு சூழ்நிலைகளில் எப்படி செபித்தார் என்று பார்ப்போம்.

செபம் என்பது ஒரு வலிநிவாரண மருந்து போல துன்பம் வரும்போதெல்லாம் ஒரே மந்திரத்தைத் திரும்ப திரும்ப ஓதுவதில்லை. இயேசு செபித்ததைச் சற்று கவனித்தாலே அவரிடமிருந்து செபிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

“அவரோ ஆள் நடமாட்டமில்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனிடம் வேண்டிவந்தார்.” (லூக் 5:16) “அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது.” (லூக் 9:29) “அவர் வேண்டுவதற்காக ஒரு மலைக்குப் போனார். அங்கு கடவுளிடம் வேண்டுதல் செய்வதில் இரவெல்லாம் செலவிட்டார்.” (லூக் 6:12)

அவருடைய செபத்தில் நான்கு அம்சங்கள் இடம் பெறுகின்றன: 1)வானத்தை அண்ணாந்து பார்த்தல். இதில் அவர் தம் தந்தையை நோக்கி தன் கண்களையும் உள்ளத்தையும் உயர்த்துகிறார். 2)தந்தை தன் மீது கொண்டுள்ள அன்பை அறிக்கையிடுகிறார். 3)தந்தையைப் போற்றி நன்றி கூறுகிறார். 4)தன் வேண்டுதலைக் கூறி தன் தந்தையின் திருவுளத்துக்கு இசைந்து போகிறார்.

**இதோ சில எடுத்துக்காட்டுகள்:** “இயேசு அண்ணாந்து பார்த்து “தந்தையே நீர் என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்ததற்காக நன்றி கூறுகிறேன்” “இயேசு அண்ணாந்து பார்த்து “தந்தையே! நீர் எப்போதும் என் வேண்டுதலுக்குச் செவி சாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். எனினும் நீர் என்னை அனுப்பினீர் என்று சூழ்ந்து நிற்கும் இக்கூட்டம் நம்பும் பொருட்டே இப்படிச் சொன்னேன்” என்று கூறினார். (யோவா 11:41-42)

கிரேக்கர்கள் சிலர் இயேசுவைக் காண விரும்பிவந்தனர். அப்போது இயேசு இவ்வாறு செபித்தார்: “தந்தையே! இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும் என்பேனோ? இல்லை இதற்காகத்தான் இந்நேரம் வரை வாழ்ந்திருக்கிறேன். தந்தையே உம் பெயரை மாட்சிப்படுத்தும்” என்றார். (யோவா 12:27) அவர் பாடுபட வேண்டிய நேரம் நெருங்கிவிட்டதை அறிந்த அவர் அந்த நேரத்துக்காகவே வாழ்ந்திருக்கிறேன் என்று கூறுகிறார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தேடியதற்கு இந்த செபம் சிறந்த எடுத்துக்காட்டு.

இயேசு அப்பங்களைப் பலுகச் செய்யும் முன் “வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டுச் சீடர்களிடம் கொடுத்தார்.” (மத். 14:19)

இறுதி இராவுணவின்போது தம் சீடர்களுக்கு நீண்டதொரு உரை ஆற்றியபின் “இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது: “தந்தையே நேரம் வந்துவிட்டது. உம் மகன் உம்மை மாட்சிப் படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும். ஏனெனில் நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர் மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு” (யோவா 17:1-3)



“நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன். தந்தையே உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும்.”(யோவா 17:4-5)

ஒரு முறை நமது மறைந்த முன்னாள் பேராயர் மைக்கேல் அகுஸ்தீன் அவர்களைக் காணச் சென்றிருந்தேன். அப்போது அவருடைய காலடியில் அவருடைய நாய் தூங்கிக் கொண்டிருந்தது. அவர் என்னிடம் “பாருங்கள் என் நாய் ஒன்றும் செய்யவில்லை, என் காலடியில் தூங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குத் தெரியும் தான் எஜமானனின் காலடியில் இருக்கிறோம் என்று. அவ்வாறுதான் நானும் நற்கருணை நாதரின் காலடியில் தூங்கிக்கொண்டிருந்தாலும் விழித்துக்கொண்டிருந்தாலும் நான் அவர் காலடியில்தான் இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும்” என்றார்.

**இயேசு தம் பணிக்காகத் தேர்ந்துகொண்டவர்களுக்காக செபிக்கிறார்:** “உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை. நீர் என்னை உலகிற்கு அனுப்பியதுபோல, நானும் உலகிற்கு அனுப்புகிறேன். அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன். (யோவான் 17:17) அர்ப்பணத்திலும் தம் சீடரோடு அவருக்கு எத்துணை நெருக்கம்!

அவர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை, அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன். (அன்றே நம் ஒவ்வொருவருக்காகவும் இயேசு வேண்டிவிட்டார்.)

இதோ இயேசு நம் ஒவ்வொருவருடைய குடும்பத்துக் காகவும் செபிக்கிறார். மிக அருமையான இந்த செபத்தை நற்கருணை நாதர் முன் அமர்ந்து அவர் நமக்காகச் செபிப்பதைக் கேட்டால் எவ்வளவு நலமாக இருக்கும்!

“எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!” (யோவா 17:21) இன்னும் இந்த அதிகாரம் முழுவதும் இயேசுவின் அருமையான செபம் நீடிக்கிறது.

தொடர்ந்து 17-ஆம் அதிகாரம் முழுமையையும் திவ்ய நற்கருணை முன் அமர்ந்து வாசித்து வரி வரியாகத் தியானித்தால் இயேசுவின் உள்ளக்கிடக்கையை நன்கு புரிந்துகொள்ளலாம். தம் சீடர்களிடம் மிகுந்த நெருக்கமாகப் பேசிய வார்த்தைகள் இவை. சில சமையங்களில் இவற்றில் ஒருசில வசனங்களை வாசித்துவிட்டு இயேசுவின் பாதத்தில் அமர்ந்து ஒன்றும் விளக்கம் தேடாமலும் ஒன்றும் நினைக்காமலும் இந்த வார்த்தைகளைச் சொன்ன இயேசுவின் பிரசன்னத்தை மட்டும் உணர்வதில் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களைச் செலவிட்டால் இயேசுவோடு மிகுந்த நெருக்கத்தை உணரலாம். மன ஓய்வும் அமைதியும் கிடைக்கும்.

- தொடரும்



# தேர்தலோ தேர்தல்

– சுவாமி ஆ. லூயிஸ்.

**ஆ**ண்டவருடைய அருளாலும், தலத்திருச்சபையின் ஆசீராலும் ஆசிரமத்திலிருந்து வாழவும் பணிபுரியவும் வாய்ப்பு கிடைத்தது அவருடைய அருளாசீர், சுவாமி அமலோரானந்தாவின் வழிகாட்டுதலும் என்று நன்றி உணர்வோடு அனுபவப் பகிர்வு, வியாபியில் தொடர்ந்து இடம் பெறுவது எழுத்தாளர்களுக்கும் வாசக அன்பர் களுக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது. வியாபியும் வியாபார நோக்கைக் கடந்து, நற்செய்திப் பணியாக இன்றும் தொடர்வது அவருடைய அருளாகும், அச்சகத்தின் பொறுப்பாளர்களின் நன்மனமுமாகும்.

“இன்றைய உலகில் திருச்சபை” என்ற அதிகாரப்பூர் வமான போதனை நமக்கு எவ்வளவு சிறந்த வழிகாட்டி யாக இருந்து வருகிறது என்று ஏட்டைப் புரட்டிப் பார்த்தால் புரியும். நமது நினைவுகள் திருச்சபை நினைவுகளாகும். திருச்சபையின் நினைவுகள் மூவொரு கடவுளின் முன்மொழியாகும். தேர்தல் களத்தில் இறங்குவோம்.

**தேர்தல் களம்:** பொதுவாக நாம் எல்லாரும் வாழையடி வாழையாக வரும் சிந்தனைப் பாதைகளைப் பற்றிக் கொள்வோம். இதில் ஓரளவு உண்மை இருப்பினும், இன்னமும் உண்மையை விரிவாக்க இடமுண்டு என்று தேடும்போது, வளர்ச்சிக்கு இடம் உண்டு. கடவுள் ஒருவர் தான் அனைத்தையும் தேர்ந்தெடுக்கிறார், பராமரித்து வருகிறார். சுதந்திரம் பெற்ற மக்களாகிய நாம் சுதந்திரத் தோடு அவருடன் ஒத்துழைப்பதே ஏற்புடைய தர்மம். இருப்பினும் தர்மமும் அதர்மமும் அன்று முதல் இன்றுவரை, என்றும் ஒரு போராட்டமாகத் தொடர்ந்து வருகிறது. போராட்டத்தில் வெற்றி பெற பணிவோமா?! பணிந்தால் வெற்றி உண்டு; பணிய மறுத்தால் தேர்தல் களம் போர்க்களமாகும். இன்று பொதுவாக தேர்தல் போர்க்களமாகவே காட்சி அளிக்கின்றது. தேர்தலின் வரவு செலவு இவைகளைப் பார்த்தால் நமக்கே வேதனைத் தரும் தொடர் கதையாகும். சமூகத்தின் தேர்தல்கள் வேதனைகள் சமயங்களில் இடம்பெறும் தேர்தல்களை யும் களங்கப்படுத்தி வருகிறது. இறைவன்தானே தேர்தலின் கதாநாயகன். அவர் இலவசமாய் அருள்வதை நாம் வியாபாரமாக்குவதில் என்ன ஆதாயம் உண்டு.

படைப்பு முழுவதும் இறைவனின் ஒரு தொடர் தேர்தல் களமாகும். படைப்பை பரிவன்புடன் பாதுகாக்க, தனது சாயலாகப் படைக்கப்பட்டு வரும் அவருடைய குழந்தை களின் உள்ளங்களும் அவருடைய தேர்தல் களங் களாகும். அகமும் புறமும் இருக்கும் தேர்தல் களங்களை நாம் எவ்வளவு திறமையோடும். பரிவோடும், பண்போடும், பணிவோடும் பராமரித்து வருகிறோம் என்று விழிப்போடு இருப்பது தேவையாகும். படைப்பின் இயக்கத்தையும், நமது இதய இயக்கத்தையும் இறைவனுடைய திருவுளப் படி இயக்கி வந்தால் இன்பவன வாழ்வு தொடரும் இல்லையேல் இன்பமும் துன்பமும் தொடரும். இந்நிலையையும் இயேசு வழியாக இறைவன் செம்மைப் படுத்தி வருவதால் நமது வாழ்வில் இடம்பெறும் தேர்தல் பணி நன்றாக இடம்பெற இறையருள் உண்டு. களம் பக்குவமாய் இருந்தால் விதைக்கப்படுபவை மிகுந்த பலன்தர வாய்ப்பு உண்டு. இந்நிலையில் தனியாகவும் குழுவாகவும் நாம் எல்லாரும் சிறந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை நம்மைவிட்டு நீங்காது அல்லவா?

**தேர்தல் வாழ்வதற்கே:** வாழ்வதற்கே கடவுள் நம் ஒவ்வொருவரையும் அன்றாடம் படைத்து, பராமரித்து வருகிறார். அவரில் அனைவருக்கும் முடிவில்லாத வாழ்வு உண்டு. அவரைப் பிரிந்தால் அழிவுதான் ஆதாயம். இவ்வாறு கடவுள் நம் ஒவ்வொருவரையும் வாழ அழைக் கின்றபோது, நாம் சுதந்திரத்தோடு வாழ அவரோடு அவரில் அவரின் புகழுக்காக, அனைவரின் நன்மைக்காக வாழ்வதே வாழ்வாகும். ஒருவரையும் இழக்க வேண்டும் என்பது எப்போதும் அவருடைய விருப்பமும் அல்ல, திட்டமும் அல்ல என்பதில் நிறை நம்பிக்கைக் கொண்டு தேர்ந்தெடுத்த குலம், அரச குருத்துவக் குலம் என்று இன்று அனைவரும் பயணம் செய்ய அருள் அழைப்பு உண்டு.

எல்லாரும் வாழவேண்டுமென்பதே அவருடைய திட்டம் என்பதை அவருடைய பிள்ளைகள் சமூகத்திலும் சமயங்களிலும் செயல்படுத்துவதில் அனைவரும் முன்னேற என்றும் எங்கும் வழியும் வாய்ப்பும் உண்டு. பல்வேறு பிரிவினைகள் அனைவரையும் சமத்துவத்தோடு வாழ வைப்பதில்லை. எல்லார்க்கும் உரியதை ஒரு சிலர் மட்டும் அனுபவிக்கும் போது, அங்கே பூசலும் பிளவும், போராட்டமும் பகைமையும் எழுகின்றன. வாழ்வின் அடிப்படை உண்மைகளைக் கூட மனித குலம் இன்றும் கற்றுக்கொள்ளவில்லையே என்று தான், ஒருசில குழுக்களாவது வாழ்வுக்காகப் போராடி வருகிறது. அகதிகள், புலம் பெயர்ந்தோர், நாடு கடத்தப் படுபவர் படும் பாடுகளை நாம் சந்தித்தால், அனுபவித்தால் புரியும். தன்னைப் போலவே அயலானையும் நினைக்காத வரை கடவுள் நம்பிக்கை மேலோட்டமாகும்.

**வாழலவை வாழ்ந்திடுவாய்:** இயேசு எல்லாரையும் வாழ வைக்க தன் உயிரைக் கொடுத்தார், கொடுத்துக் கொண்டு வருகிறார் என்பது வரலாறும் மறைபொருளுமாகும். இதையேத்தான் இன்றைய இல்லறவாசிகள், துறவற வாசிகள் கடைபிடித்து வருகின்றனர். பலவீனங்கள் அங்கு மிங்கும் இருந்தாலும், அவைகளுக்கு மத்தியில் இருக்கும் இறைவனின் இரக்கத்தையும், இயேசுவின் இதயத்தையும், இதயத்திற்குள் இருக்கும் ஆவியையும் நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. யாராக இருப்பினும் அவரில் இறைப் பிரசன்ன உணர்வு இருந்தால், வளர்ந்தால் வாழ்வு என்பது நிரந்தரமாகும் என்பதை நம்பிக்கையோடு கடை பிடிப்போம். முடிவில்லாத வாழ்வைத் தேடி பயணிப்போம்.

சுயநலத்தில் சாவு தான் முடிவு. சுயநலத்தின் எல்லை களைக் கடக்கின்றபோதெல்லாம் புதுவாழ்வின் ஆரம்பங் களை அரவணைக்கின்றோம். வாழ்வின் ஆழமான அர்த்தத்தை ஆண்டவரிடமிருந்து அனைவரும் சிறப்பாக கிறிஸ்தவர்களும் பெற்று பெருமிதத்தோடு வாழமுடியும். தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்க தனது வாழ்வை பணயம் வைக்கும்போது இயேசுவாக நாம் சான்று பகர்வதில் மனநிறைவடைவோம். ஆவி ஆண்ட வரோடு, உடல் படைப்பிற்கு என்ற நியதியே நமது நெறியாகும் என்று மகிழ்வடைவோம். நமக்கு முன் வாழ்ந்தவர்களில் பலர் நமக்கு நல்ல எடுத்துக்காட்டு களாய் இருக்கின்றனர், இன்றும் நமது நினைவை விட்டு நீங்காமல் இருக்கின்றனர். என்றும் எங்கும் எல்லாரிலும் எப்போதும் வாழ இயேசுவின் பாதையை நாமும் பின்பற்று வோம், பிரகாசிப்போம், பிரார்த்திப்போம். ●



# கிறிஸ்துவ நேர்மை

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**கடவுளின் விருப்பம்:** உலகில், குறிப்பாக நம் நாட்டில், ஒரு பெரிய நெருக்கடி மக்களை அச்சுறுத்துகிறது. நமது பெருவாரியான தலைவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், தொழில திபர்கள், ஊழியர்கள், மற்றும் பொது மக்களிடம் நேர்மையில்லை என்பதே அந்த நெருக்கடியாகும். நேர்மை யில்லாத நாட்டில் நீதி நிலவுவதில்லை. நீதி சரிந்த சமுதாயத்தில், சாமானிய மக்களுக்கு மகிழ்ச்சி, அமைதி, வாய்ப்பு, முன்னேற்றம், நட்பு, மற்றும் பாதுகாப்பு கிடைக்க வாய்ப்புகள் இல்லை. மாறாக, அந்த சூழலில், எதேச் சதிகாரம், முறைகேடு, அநீதி, ஆணவம், சுரண்டல், அடக்குமுறை, வன்முறை, ஏழ்மை, பாகுபாடு, அச்சம், போராட்டங்கள், தீவிரவாதம், மற்றும் பிரிவினை வாதங்களே பலரின் தினசரி வாழ்க்கை வடிவங்களாக இருக்கும். ஆனால் கடவுள் மக்களை, மகிழ்ச்சி யாக மற்றும் இணக்கமாக வாழவே படைத்திருக்கிறார். ஒவ்வொரு தனி மனிதர் வாழ்க்கையிலும், உள்ளும் புறமும், நேர்மையும் கண்ணியமும் சுவாசமாக மாறாமல் கடவுளின் விருப்பம் நிறைவேறுமா?

**நேர்மையாளர்:** நேர்மை என்பது, ஒருவர் தன் நடத்தையில் அதாவது சிந்தனை, சொல் மற்றும் செயலில் உண்மையாக இருப்பதாகும். ஒரு நேர்மையான மனிதர், உண்மையான வராக, தவறுக்குப் பொறுப்பேற்றுக் கொள்பவராக, நம்பத்தகுந்தவராக நடத்தையில் மதிக்கத்தக்கவராக மற்றும் பெருந்தன்மை வாய்ந்தவராக வும் இருப்பார். கடவுள் எதிர்பார்க்கும் ஒரு நேர்மையாளர், எந்த சூழலிலும் எந்த வகையிலும் மற்றும் நேரத்திலும் பொய்மை, லஞ்சம், களவு, ஏமாற்று மற்றும் அநீதிகளை மறுத்து, விடுத்து மற்றும் எதிர்த்து உண்மையானவராக வாழுவார். நாம் எப்படி வாழுகிறோம்?

**கிறிஸ்துவர்களின் நேர்மை:** நாம் ஆண்டவர் முன்னிலையில் மட்டு மல்ல, மனிதர் முன்னிலையிலும், தனிமையிலும் கண்ணியம் மற்றும் நேர்மையைக் கடைபிடிப்பதையே (2கொரி.8:21) நம் நோக்கமாகக் கொள்ளவேண்டும். உதாரணமாக, நிறைவான, மற்றும் நேர்மையான எடை கற்கள் நம்மிடம் இருக்க வேண்டும். அதனால், நம் கடவுள் நமக்கு கொடுக்கவிருக்கும் வாழ்வில், நம் ஆயுள் நீடித்திருக்கும். நாம் நலமாக நெடுநாள் வாழுவோம். மாறாக நேர்மை யற்று நடப்போர் அனைவரும், கடவு ளுக்கு அருவருப்பானவர்களே. (இணை. 25:13-16) சிலர், வியாபாரத்திலும், வாழ்க்கையிலும் கள்ளத் துலாக் கோல், அதாவது ஏமாற்றுகள், கலப் படங்கள், முறைக்கேடுகள், ஊழல்கள், மற்றும் பல கள்ள செயல்கள் செய் கிறார்கள். அவை கடவுளுக்கு அருவருப்பானது. மாறாக முத்திரை யிட்ட படிக்கல்லே அதாவது நேர்மை யான செயல்களையே அவர் விரும்பு கிறார். (நீதி.மொ.11:1) குடும்பத்தில், மற்றும் சமுதாயத்தில் வஞ்சனை செய்வோருக்கு கடவுளின் திருமுன் இடமில்லை. பொய் உரைப்போர் அவர் கண்முன் நிலைப்பதில்லை. மறுக்கப்படு வார்கள். (திருபா.101:7).

**கலங்கரை விளக்கு:** பொய்மை அலைகள் நிறைந்த சமுதாயக் கடலில் நேர்மையாக வாழ்ந்து கரை சேர திருமறை நூல் நமக்குக் கலங்கரை விளக்காகத் திகழ்கிறது. கிறிஸ்துவர் களாகிய நாம் பகலில் நடப்பது போல மதிப்போடு, நாணயத்தோடு, மற்றும் நேர்மையோடு நடக்குமாறு கற்பிக் கிறது. (உரோ.13:13) ஆனால், சிலர் சூழ்ச்சியான, போலித் தனமான மற்றும் வெட்கக் கேடான செயல்கள் புரிகிறார் கள். (2கொரி.4:2) இவ்வாறு, இரட்டை முக வாழ்க்கையை விவிலியம் கண்டிக்கிறது. (பிலிப்.4:8) நேர்மையான சிந்தனை, சொல், செயல்களையெல் லாம் நாம் நம் மனதில் குடியேற்றுவது அவசியமாகும். மேலும், நாம் இறைப் பற்றும், கண்ணியமும், நேர்மையும் நிறைந்தவர்களாய் யாருக்கும் தொல்லையின்றி அமைதியோடு வாழ வேண்டும் (1திமொ.2:2).

**நன்றே செய்க:** நாம் நம் வேலையை மட்டுமே பார்த்துக் கொண்டு, பிறருக்கு தீங்கிழைக்காமல், நம் கையால் உழைத்து அமைதியாய் வாழ்வதில் நோக்கமாயிருப்பது முக்கிய மாகும். அப்பொழுது மற்றவர்கள் நமக்கு நேர்மையாளர்கள் என்ற நன்மதிப்பை வழங்குவார்கள். மேலும், நாம் பிறர் கையை நம்பாதபடி வாழு வோம். (1தெச.4:11,12) ஒரு தொழி லாளி, தன் ஒருநாள் ஊதியத்திற்கான நிறைவான உழைப்பை தரவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். ஊழியர் களாக, நாம் கிறிஸ்துவிற்குக் கீழ்படி வதைப் போல நம் முதலாளிக்கு மற்றும் தலைவருக்குக் கீழ்படிய வேண்டும். மேலும், மக்களை மகிழ்விப்பவர்களாக இல்லாமல், கிறிஸ்துவ பணியாளராக, கடவுளை மகிழ்விப்பவராக திகழ வேண்டும். (எபே.6:5,6) அதற்குக் கைமாறாக, கடவுள் நமக்கு மகிழ்ச்சி, மற்றும் நிறைவாழ்வை அருளுவார். (கொலோ.3:24).

**ஆண்டவரின் எச்சரிக்கை:** முதலாளிகள், மற்றும் தலைவர்கள் தங்கள் ஊழியர்களிடம் நேர்மை யாகவும் வெளிப்படைத் தன்மையாக வும் நடந்துகொள்ள வேண்டும். அவர் களை எந்த வகையிலும் அச்சுறுத்து வது பாவமாகும். ஏனெனில், முதலாளிக் கும் தொழிலாளிக்கும் ஒரே ஆண்டவர் தான் விண்ணில் உண்டு. அவர் ஆள் பார்த்து, பாகுபாடு செய்து செயல்படு வதில்லை. (எபே.6:6-9) மேலும், ஆண்டவர் இயேசு கிறிஸ்து, வேலை யாளர், தன் உரிய கூலியைக் கவுரவ மாகப் பெற உரிமை உடையவரே என கற்பித்திருக்கிறார். (லூக்.10:9) ஊழியர் களுக்கு உரிய ஊதியத்தை வழங்காத வர்களுக்கு “ஐயோ கேடு” ஏனெனில் அவர்கள் கடவுள் பார்வையில் நீதியற்ற வர்களாக நிற்கிறார்கள் (எரே.22:13).

**கடவுள் திருமுன்:** சிலர், தங்கள் வயலில் அறுவடை செய்த வேலை யாளர்களுக்குரிய கூலியை பிடித்துக் கொள்கிறார்கள். சிலர் கூறும் சம்பளம் ஒன்று, கொடுக்கும் சம்பளம் வேறொன்று வஞ்சிக்கப்பட்டோரின் பசி, வலி, மற்றும் வறுமை ஆண்டவரிடம் கூக்குரலிடுகிறது. இந்த கூக்குரல்கள் ஆண்டவரின் செவிக்கு எட்டியுள்ளது. (யாக்.5:4) கடவுள் ஒடுக்கப்பட்டோர் பக்கம் நின்று நீதி வழங்குவார். ஆகவே, நேர்மை யாக வாழ்ந்து கடவுளின் பிள்ளையென வாழ்வோமா நண்பர்களே?

---

## புதிய கல்வியாண்டே வருக!!!

புதிய கல்வியாண்டின்
புதிய நோக்கங்கள்!
புதிய புத்தகங்கள்!
புதிய நோட்டுகள்!!!

எல்லாம் புதியவை!
ஆனால்!
எண்ணங்கள் பழையவை
ஏற்றங்கள் குறைந்தவை!!!

மனதை அடிமையாக்கி
மனித மாண்பை விற்பனையாக்கி!
பகுத்தறிவை அடிமட்டமாக்கி
சாதிகளை மேல்மட்டமாக்கும்
மனித எண்ணங்களே போ! போ!

ஆண்டவர் இயேசுவின்
பள்ளியிலே படிப்போம்!
மனித நேயத்தைக் கற்போம்!
தினம் தினம் இயேசுவின்
நூலகத்தில் படிப்போம் - புதிய
கல்வியை வரவேற்போம்!!

P. **ஜான் கென்னடி** ஆசிரியர்
புனித மைக்கேல் மேல்நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-1.



## நாள்தோறும் செபமாலை செபியுங்கள்

– சகோ.அ.ஆரோக்கியதாஸ், திண்டிவனம்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

அடுத்த பகுதி, நம்மை நாம் பாவிகள் என்று ஏற்றுக்கொண்டு லூக்.18:13 சொல்வது போல நம்மை தாழ்த்தி நமக்காக செபிக்க குறிப்பாக நிலைவாழ்வு தொடங்க இருக்கும் நமது இறக்கும் தருவாயில் நமக்காக பரிந்துரை செய்ய வேண்டுகிறோம். லூக்கா 1:48 எல்லாத் தலைமுறை யினரும் பேறுபெற்றவர் என்று போற்றும் அன்னை மரியாவை இந்த தலைமுறையினர் நாமும் செபித்து பரிந்துரை செய்ய கேட்பது தவறில்லையே. யோவான். 19:27ல் இயேசு சிலுவை யில் தொங்கியபோது “இவரே உம் தாய்” என்று அன்பு சீடர் யோவான் மூலம் நமக்கும் தாயாக கொடுத்துள்ளார். கல்வாரி மலையில் இறைமகன் இயேசு தன் அன்னையை நமக்கு அன்னையாக தந்த நேரம் முதல், அவரை நம் அன்னையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். நமது தேவைகள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைப்போம்.

**திரித்துவ ஆராதனை:** ஒவ்வொரு பத்து மணிக்கும் பிறகு இந்த செபத்தை சொல்கிறோம். மூவொரு இறைவனை நம்புவதோடு அவருக்கு உரிய மகிமையை செலுத்துகிறோம். இயேசுவின் வாழ்வில் இந்த மூவொரு இறைவன் பற்றி தெரிந்துகொள்கிறோம். 1) மத்.3:16-17 இயேசு திருமுழுக்கு பெற்று தண்ணீரைவிட்டு வெளியேறிய போது, 2) மத்.17:2-5 இயேசு தோற்றம் மாறியபோது, 3) மத்.28:19 சீடர்களை பணி செய்ய அனுப்பும் போது “தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்” என்கிறார். இதில் அடங்கி உள்ள மிகப்பெரிய மறை உண்மையை இவ்வுலக ஞானத்தால், அறிவை, புத்தியை பயன்படுத்தி அறிந்து கொள்ள முடியாது. தாங்கள் ஞானிகள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்கள் மடையர்களே. ஏனெனில் மனித ஞானத்தைவிட கடவுளின் மடமை, ஞானம்மிக்கது. எனவே, இது இறைவெளிப்பாடு, நம்புவோம். இவ்வுலகில் இருக்கும் வரை மகிமைப்படுத்துவோம். இறப்புக்குப் பின் நிலை வாழ்வில் நன்கு புரிந்துகொள்வோம்.

**ஓ என் இயேசுவே:** திரித்துவ ஆராதனைக்குப்பின் இந்த செபம் சொல்ல வேண்டும். ஓ, என் இயேசுவே, எங்கள் பாவங்களை மன்னித்தருளும். எங்களை நரக நெருப்பி லிருந்து காப்பாற்றும். சகல ஆத்துமாக்களையும் விசேஷ மாய் உமது உதவி யாருக்கு அதிகம் தேவையோ அவர்களைப் பரலோகப் பாதையில் நடத்தியருளும்.

**உத்தரிக்கிற ஸ்தலம்:** இது மரணத்திற்குப் பிறகு 100-100 தூய்மையாக இல்லாத ஏறக்குறைய அனைத்து ஆன்மாக்களுமே பாவத்தின் காரணாக வேதனை அனுபவிக் கும் பொருட்டு தள்ளப்படுகிற ஓர் அக்கினிச் சிறையாகும். இங்கு வேதனையின் கொடுமை எவ்வளவு என்றால் ஒரு நிமிடம் இந்த பயங்கரமான நெருப்பில் இருப்பது, நூறாண்டு காலம் இருப்பது போல இருக்கும். இங்குள்ள ஆன்மாக்கள் எந்நிலையில் இருந்தாலும் கடவுளின் அன்புக்குரியவர்கள். அவர்கள் தங்களுக்கு தாங்களே உதவி செய்துகொள்ள முடியாது. இவர்களுக்காக செபிக்க வேண்டியது நமது கடமையாக உள்ளது. இதை கடவுள் விரும்புகிறார். அன்னை மரியாவும் உதவ வேண்டுமென்கிறார். நமது செப தபங்களால் ஒறுத்தல் முயற்சிகளால் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து ஓர் ஆன்மாவை மீட்கும் போதெல்லாம், அந்த ஆன்மா மட்டற்ற மகிழ்ச்சி கொள்ளும்.

1917ல் நம் அன்னை மரியா பாத்திமாவில் மூன்று சிறுவர் களுக்கு காட்சி கொடுத்த போது “செபிக்க கேட்டுகொண்ட செபம்தான், இது. நாமும் செபித்து உத்தரிக்கிற ஆன்மாக் களுக்கு உதவி செய்வோம்”.

1) நரகத்திற்கு எதிரான வலிமையுள்ள கேடயமாக இருக்கும் என் செபமாலை தீயப் பழக்கங்களை அழிக்கும், பாவத்திலிருந்து விடுவிக்கும், தப்பறைகளை ஒழிக்கும்.

2) மறை உண்மைகளை பக்தியுடன் தியானித்தபடியே செபமாலை சொல்லுகிறவர்களை எந்தத் துர்பாக்கியமும் மேற்கொள்ளமாட்டாது. அவர்களுக்கு துர்மரணம் நேரிடாது. பாவத்திலிருப்பவர்கள் மனம் மாறுவார்கள். நல்லவர்கள் இன்னும் தூய்மையில் வளர்ந்து நித்திய நிலையான நீடித்த பேரின்ப வாழ்வுக்குத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

3) செபமாலை வழியாக நீங்கள் கேட்பவைகளைப் பெற்றுக்கொள்வீர்கள். தினமும் தவறாமல் என் செப மாலையை செபித்து வருகிறவர்கள் என் அன்புக் குழந்தை களாயும் இயேசுவின் சகோதரரும் சகோதரிகளு மாயிருப்பார்கள். - தொடரும்...

79 இளம் உள்ளங்களுக்கு

## அன்பு தன்னலம் நாடாது



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**கேளிக்கை அரங்கம்:** வட்ட வடிவ அரங்கம். கீழே பாதாள அறைகளில் அடைப்பட்டிருக்கும் சிங்கங்கள். சிங்கங்களால் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் பாதுகாப்பான வட்டவடிவ வளையத்தில் அமர்ந்துபார்க்க பட்டு வண்ண இருக்கைகள், கீழே பாதாள அறைகளிலிருந்து சிங்கங்களை வட்ட வடிவ அரங்கினுள்ளே திறந்துவிட்டு, மோதவிட்டு, வேடிக்கை பார்க்கும் கேளிக்கை அரங்கம்.

**விபரீத வேடிக்கை:** மேலே அரங்கின் முதல்வரிசையில் நடுவில் அரசனுக்குரிய பகட்டான இருக்கையில் வீற்றிருந் தான் அந்நாட்டை ஆளும் அரசன். அவன் அருகில் பேரழகி யான இளவரசி. தொடர்ந்து முக்கிய பிரமுகர்களும், பிரபுக் களும், இளவரசியை மணக்க இருக்கும் பிரபுகுல வீர இளைஞனும் முதல் வரிசையிலேயே அவர்களுக்குரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். கீழே பாதாள அறைகளி லிருந்து திறந்துவிடப்பட்ட சிங்கங்கள், கீழ்வட்ட வடிவ அரங்கினுள்ளே பாய்ந்து வந்தன. அவை கொடூரமாக ஒன்றையொன்று பலமாகத் தாக்கிக் கொண்டன. ஒரே இரத்த களறி; புழுதிப் படலம். சிங்கங்களின் உறுமல்கள்.

**இளவரசியின் வினோத விளம்பரம்:** “அதோ! அங்கே கீழே இருப்பதைவிட, இங்கே சொகுசாக அமர்ந்து ரசிப்பது மேல் அல்லவா!” என்று சொல்லி மன்னர் ஆனந்தபட்டுக் கொண்டார். அப்போது இளவரசி திடீரென்று இருக்கையை விட்டு எழுந்து, “இதோ, இங்கே இருக்கையில் வீற்றிருக்கும் என் அன்பர் என் மீதுள்ள அன்பை காட்ட எனக்காக எதையும் செய்வார்” என்று சொல்லிக் கொண்டே தன் கையுறைகளை கழற்றி, கீழே சிங்கங்கள் சண்டையிடும் அரங்கினுள் வீசி எறிந்துவிட்டு தன் அன்பரை பார்த்து அர்த்தமுடன் புன்னகைத்தாள்.

**இளைஞனின் துணிச்சல்:** அந்த வீர இளைஞனுக்கு எல்லாம் புரிந்தது. இமைக்கும் நேரத்தில் சிங்கங்கள் சண்டையிடும் அரங்கினுள் பாய்ந்தான். அதே வேகத்தில் இளவரசியின் கையுறைகளுடன் மேலே வந்தான். அரங்கமே பாராட்டால் அதிர்ந்தது. ஆனால் இளைஞன் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. இளவரசியின் அருகே வந்து அவள் முகத்துக்கு எதிரே அவள் கையுறைகளை வீசி எறிந்தான்; திரும்பி சென்றான். அரசரும் கோபப்படவில்லை. தன் மகளுக்கு வார்த்தைகளால் சாட்டையடி கொடுத்தார். “உயிரை பணயம் வைக்கும் அன்பு அன்பல்ல. அது வீண் பெருமையின் வெளிப்பாடு” என்றார். அன்பை ஒருபோதும் சோதிக்கக் கூடாது. அது தானாகவே தியானம் செய்யும் தன்மையுடைய பண்பு ஆகும்.

**பைபிள்:** (1கொரி.13:5) அன்பு இழிவானதைச் செய்யாது; தன் னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 19ஆம் படலம்

யாவே கடவுளின் கட்டளைப்படி மோசே, அடுப்பிலிருந்து சாம்பலை வாரிக்கொண்டு, பார்வோன் முன்னிலையில் சென்று நின்று வானத்தில் அதைத் தூவினார். எகிப்து நாடெங்கும் அது மெல்லிய தூசியாகப் பரவி, மனிதர் மேலும் அது வெடித்துப் புண்ணாகக் கூடிய கொப்புளங்களாக மாறி, எல்லா எகிப்தியரையும் வருத்தும் இறைவன் அனுப்பிய ஆறாம் வாதையாக வந்தது. எனினும் அவ்வாதை இசுரயேலரை வருத்தவில்லை.

**40 எகிப்தில் புதிதாய்த் தோன்றிய வாதைதரும் கொப்புள நோய் இயல்பாய்த் தோன்றியதன்று. சிலை வழிபாட்டில் நம்பிக்கை வைத்து, படைப்புக் கடவுளாகிய யாவேயின் ஆணையை மறுத்ததால் நாட்டுக்கே வந்த கடவுளின் தண்டனையாகும்.**

உலகின் வாழ்வதில் இ.்.தியற்கை,
உண்மை அறிந்திதை உலகேற்கும்;
இலையலோ இந்நிலை எகிப்ததிலே
இறைவன் இருப்பையே ஏற்காமல்,
மலைகுலைந் தாலுமே தான்குலைய
மாட்டேன் என்றப் பார்வோன்தான்,
சிலைவழி பாட்டு இறைமுறையைச்
சிக்கெனப் பற்றியே தவறிழைத்தான்.

**41 ஐந்தாவது வாதையைப்போல் ஆறாவது வாதையும் விரைவில் ஓய்ந்து போகும் என்னும் மனச் செருகில் பார்வோன், யாவே கடவுளின் ஆணையை மறுத்துத் தீமைக்குமேல் தீமை செய்ததால் அவன் வாதையின் கடுமையைக் கண்டு திணறினான்.**

வாதைகள் ஐந்தவை வந்ததைப்போல்
வாரா தினியெதும் எனவெண்ணி,
பேதையாய் ஆறாம் வதையதையும்
பெரிதாய்க் கருதாப் பார்வோன்தான்,
போதையில் தன்னறி விழுந்திருப்போன்
போன்றே மமதையில் மதிபிறழ்ந்தான்!
தீதையே தினம்தினம் அவன்செய்ய,
சேர்ந்தவை செய்வதை பார்த்ததிர்ந்தான்!

**42 கெப்புளநோய் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரையுமே பற்றி வருத்தியதால் ஒருவருக்கொருவர் அக்குடும்பத்தில் உதவி செய்ய முடியாத நிலை உருவாயிற்று. அதனால், நாட்டில் உள்ள குடும்பங்கள் அனைத்துமே வாதைக்குள்ளாகி வருந்தின.**

கொப்புளப் பிணியது எகிப்தியரின்
குடும்பத் திலுள்ளோர் யாவரையும்,
அப்படிப் பற்றியே வதைத்ததனால்
அழிபிணிக் குள்ளிருந் தழுதிளைத்தார்!
தப்பியோர் எவருமே இலையதனால்
தடுத்ததை அடுத்தவர் காப்பதற்கே
எப்படி முடியும்? அதனாலே
ஏங்கின குடும்பம் குடும்பமெலாம்!

**43 மோசே தூவிய சாம்பலே தங்கள் வாதைக்குக் காரணம் என்று மக்கள் உண்மை அறியாது சாம்பலை நொந்து கொண்டார்கள்! நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் வாதைப்படுவதைப் பார்த்த பார்வோன் ஒன்றும் செய்ய முடியாதவனாய்ப் பதறிக் குமுறினான்.**

குடும்பத் திலுள்ளோர் எல்லோரும்
கொப்புளப் புண்தரு வலியாலே,
அடுப்பின் சாம்பல் தனைநொந்து
அழுதழு தோய்ந்தே துவண்டார்கள்!
தடுக்கும் வழியிலை என்றரசன்
தன்னாட் டனைத்துக் குடும்பமுமே
படும்பாட் டதனைப் பார்த்தவனும்
பதறித் தவித்தான் செயலற்றே!

**44 யாவே கடவுள் தம் வல்லசெயல் செய்யும் திறமையைப் பார்வோன் நன்கறிய கொப்புள நோய்மூலம் வெளிப்படுத்தினார். எகிப்திய தெய்வங்கள் யாவேய்க்கு எதிராய் எதுவும் செய்ய இயலா நிலையைப் பார்வோன் கண்ணாரக் கண்டு நாணினான். எகிப்தியர்கள் தங்கள் தெய்வங்களின் செயலிழந்த நிலை பார்த்து நொந்தனர்.**

பார்வோன் வழியாய் யாவேதம்
பலமதைக் காட்டவே கொப்புளநோய்,
கூர்கொண் டனைவரின் உடலுறுப்பைக்
குத்திக் கிழித்தே வரச்செய்ய,
பார்த்தே குடும்பத் துறுப்பினர்கள்
பதறினர் கதறினர் பகலிரவாய்!
சேர்ந்தே அவர்தொழும் தெய்வமெலாம்
திட்டியே அழைத்தனர் வந்துதவ!

- தொடரும்..

# சிந்தித்தலா? உணர்ச்சிவசப்படுவதா? எது சிறந்தது?

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



மனிதனுக்கு பொதுவாக இரண்டு விதமான எண்ணங்கள் இருக்கின்றன. ஒன்று சிந்தித்தல், இன்னொன்று உணர்ச்சி வயப்படுதல்.

**சிந்தித்தல் / யோசித்தல் (நன்மைகள்)**

1) சிந்தித்தலின் போது எதிர்கால திட்டங்கள் தீட்ட, உதவி செய்யும். சிந்திக்காமல் எந்த செயலும் செய்ய முடியாது. சிந்திக்காமல் செயல்படுபவர்களுக்கு அவசர குடுக்கை என்று பெயர். 2) சிந்திக்கும் தன்மை ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்கிறது. பின்னோக்கிச் செல்ல வாய்ப்பில்லை. 3) உடம்பை பொறுத்தவரையில் அவர்கள் ஆரோக்கியமாக இருப்பார்கள். தீய செயல்கள் நினைப்பதற்கு நேரம் இல்லையே. 4) சிந்தித்து செயல்படுபவர்களோடு, மற்றவர்கள் அவர்களைத் தேடி வருவார்கள். ஏனெனில் அவர்களிடம் நல்ல அணுகுமுறை இருக்கும். 5) இப்பேர்பெற்ற மனிதர்கள் எல்லோராலும் கவரப்படு வார்கள். அவர்களுக்கு விளம்பரம் தேவையில்லை. 6) அதுமட்டு மல்ல, மதிப்பு அவர்களைத் தேடிவரும். இவர் பணம் கொடுத்து பெற வேண்டிய அவசியமில்லை. 7) எந்த காரியத்தையும் சிந்தித்து செயல்படுவதினால், இவர்களுடைய அறிவுத்திறனும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகும். 8) இவர்களை "ரோல் மாடல்" என்று கூறலாம். இவர்களைக் காட்டி, வம்சத்தை உருவாக்கு வார்கள். 9) மற்றவர்கள் இவரை பின்பற்றி நடக்க வாய்ப்புண்டு. 10) சமூகத்தில் இவர்கள் உயர்த்தப்படுவார்கள். இதற்காக இவர்கள் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. இவர்களுடைய நற்பண்புகள் மற்றவர்களுக்கு வழிகாட்டியாய் இருக்கும்.

**உணர்ச்சிவயப்படுதல் (தீமைகள்)**

1) மன இறுக்கத்திற்கு ஆளாக வேண்டும். இதய நோய், இரத்த அழுத்தம், குடல்புண், முதலிய நோய்கள் தாக்க வாய்ப்புண்டு. 2) இவ்விதமான நபர்களுக்கு, அதிகப்படியான கோபம் வரும். கோபம் உடல் முழுவதும் தீங்கு விளைவிக்கும். கோபத்தில் எடுக்கும் முடிவு சரியானதாய் இருக்காது. 3) வழிவாங்கும் தன்மை வளரும். இது ஒரு மோசமான பண்பு. 4) சரியான தூக்கம் இருக்காது. எப்போதும் கெட்டசிந்தனையிலே இருக்கும் 5) மற்றவருடைய உறவு, நல்ல நிலையில் இருக்காது. அநேகர் இவர்களுடைய உறவை துண்டிக்க முயற்சிப்பார்கள். 6) அடிக்கடி மருத்துவரை சந்திக்க நேரிடும். வருவாயில் அநேக பகுதி மருந்துக்கு போய்விடும். 7) மூன்று வேலை உணவு என்பது ஒரு கேள்விக்குறி ஆகிவிடும். உணவு குறையும் பட்சத்தில் நோய் எதிர்ப்பு சக்தி குறைய வாய்ப்புண்டு. 8) எப்போதுமே ஒரு சோர்ந்த நிலை காணப்படும். கலகலப்பாக இருப்பது என்பது ஒரு பெரிய விஷயம். 9) இப்பேர்பெற்ற குணம் உடையவர்கள், மற்றவருடைய அறிவுரைகளை கேட்பது என்பது இயலாத காரியம். 10) கடவுளை பொறுத்தவரைக்கும், கடவுளுக்கும் இவர்களுக்கும் உள்ள இடைவெளி, நீண்டு கொண்டே போகும்.

இந்த இரண்டு பண்புகளையும், அதாவது சிந்தித்தல், உணர்ச்சிவயப்படுதல், இவற்றை சீர்தூக்கி பார்த்து எது சிறந்தது என்பதை கண்டறிந்து அதை பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இந்த உலகிலே நாம் வாழ்கின்ற காலம் ஒரு குறிப்பிட்ட காலம். எதற்காக தேவையில்லாத உணர்ச்சி வயப்படுதல் பண்பை ஏற்படுத்திக் கொண்டு, நம்மையே வருத்திக் கொள்ள வேண்டும். சிறந்த சிந்தனையாளர் என்ற பெயர் பெற்று வாழ முற்படுவோம். இதற்கும் கடவுளுடைய அருள் நமக்குத் தேவை. அவர் கரம் பிடிப்போம், கடவுள் நம்மை வழிநடத்துவர்.

**தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-178**

**ஜூன் மாத வெளியீடு. (2018)**

**அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ், தாராபுரம்.**

**வா**ரம் தவறாமல் 112 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்துவரும் வாசகர் களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். பூக்களில் சிறந்த பூ "மன்னிப்பு" இயேசுவின் வாழ்வின் கல்வாரியில் கூட இறுதி வார்த்தையில் ஒன்று தந்தையே இவர்களை மன்னியும் என்று கூறி ஜெபித்தார். ஒரு இளம் வயது பெண் பேருந்தில் பயணம் செய்தபோது அடுத்த நிறுத்தத்தில் உடல் பருமனான பெண் ஒருவர் பல பைகளுடன் அந்தப் பேருந்தில் ஏறி அந்த இளம் வயது பெண்ணின் பக்கத்தில் அமர்ந்தார். அவரது பருத்த உடலும் பைகளும் அந்த இளம் பெண்ணை நெருக்கிக் கொண்டிருந்தன. அந்த இளம் பெண்ணிற்கு அடுத்த பக்கத்தில் அமர்ந்திருந்த பயணி ஒருவர் இதனைப் பார்த்து அதிருப்தி அடைந்தார். உடனே அந்த இளம் பெண்ணிடம் ஏன் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்க வில்லை? பேசாமல் இருக்கிறீர் என ஆதங்கப் பட்டார். அப்பெண்ணோ சிரித்தவாறு நாம் சேர்ந்து பயணிக்கப் போவது மிகக் குறுகிய நேரம்தான். எனவே அற்பமான தொரு விஷயத்திற்காக மரியாதை குறைவாக பேசுவதோ வாதிடுவதோ தேவை யற்றது. பொறுத்தவன் பூமியாள்வான், மன்னிப்பவன் தெய்வம் என்று கூறி அடுத்த நிறுத்தத்தில் இறங்கத்தான் போகிறேன் என்றார். என் அன்பிற்குரியவர்களே! இவ்வுலகில் நாம் வாழப் போகும் காலம் மிகவும் குறைந்தது. எனவே அடுத்தவர்கள் செய்யும் குற்றங்களை பெரிது படுத்தாது மன்னித்து வாழ்ந்து இறைவனின் அருளைப் பெறுவோம்.

இறை ஊழியன் அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–7–2018** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖ குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran @ gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

## இடமிருந்து வலம்:

1. எல்லா ..............செல்வர்களானீர்கள்.
3. நீங்களே..................
10. ஆவிக்குரிய...............உயிர் பெற்று எழுகிறது.
11. நீங்கள் அனைவரும் கற்றுக் கொள்ளவும் ஊக்கம் பெறவும்.............
12. கடவுளின்.................ஞானம் மிக்கது.
18. ............என்னுடைய கட்டளையல்ல.

## வலமிருந்து இடம்:

1. மீட்பு பெறும் நமக்கோ அது கடவுளின்....................
6. இறை வேண்டலில் ஈடுபடுவதற்காக சிறிது............பிரிந்து வாழலாம்.
7. இல்லையெனில் உங்கள்................. தூய்மையற்றவர்களாய் இருப்பார்களே!
8. ..................அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்.
10. ..............ஒரே உறுப்பால் ஆனது அல்ல.
13. அவற்றுள்...........தராத மொழியே இல்லை.
14. .............தூதர்களுக்கும் தீர்ப்பு அளிப்பது நாம்தான்.
17. தம் சொந்த உடலுக்கு எதிராகவே............. செய்கின்றனர்.
19. .................தங்கும் கோவில் என்று தெரியாதா?
21. .................வழியாகவே ஆண் தோன்றுகிறார்.

## மேலிருந்து கீழ்:

1. அவருடைய ................வலிமை மிக்கது.
2. நம் ..............உணவு நம்மைக் கடவுளிடம் கொண்டு சேர்க்காது.
5. ................ப் பறிக்கிறீர்கள்.
11. மிகுந்த அச்சத்தோடும் நடுக்கத்தோடும்.............
16. ..................தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார்.
18. நாமும் தண்டனைத் தீர்ப்பு அடையாதிருக்கவே............செய்கிறார்.

## கீழிருந்து மேல்:

2. மனித..................அதை அறியவில்லை.
3. எதற்கும் நான்..............விட மாட்டேன்.
4. ....................கடவுளுக்குரியவர்.
7. சிந்திப்பதில் நீங்கள் சிறு..............கள்போல் இராதீர்கள்.
8. ....................நம்பிக்கைக்குரியவர்.
9. நான்.............ச் சார்ந்துள்ளேன்.
10. ..............நானாக உழைக்கவில்லை.
14. மனைவி கணவரிடமிருந்து பிரிந்து ...........க் கூடாது.
15. அவ்வாறு பெற்றுக்கொள்வதை விட நான் சாவதே.............
20. ஆண்டவரின் பந்தியிலும் பேய்களின் பந்தியிலும் பங்கு..............முடியாது.

**1கொரிந்தியர் திருமுகம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | | | | 6 |
| | 11 | | | | | 17 | | | 5 |
| | | | | | | 19 | | | |
| | | | | | | | | 7 | |
| | | | | | | ▨ | 2 | ▨ | |
| 9 | | 15 | 16 | | | | | 18 | |
| | | | | 8 | 20 | | | | |
| | ▨ | | | 12 | | | | | |
| | | 14 | | | 13 | | 21 | | 4 |
| 3 | | | | | | 10 | | | |



**பதில் அனுப்ப வேண்டிய முகவரி:**
❖ அருட்சகோதரர். **அ.மே.ஜேம்ஸ், தூய பேதுரு வ**
**குறுக்கெழுத்துப் போட்டி** - 178
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம் – 638 656, திருப்பூர் –Dt.
செல்: 95979 75430

## விண்ணக பிறப்பின் 4-ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்: 09-01-1922



மறைவு: 15-06-2014

திருமதி. R. **எலென் ஃபிளோமினா**

**அம்மா... எங்களை ஈன்றெடுத்த தாயாகிய உங்களை நாங்கள் நேசிக்கிறோம்.**

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்" (உரோமை.14:8)

15-6-2018 வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

எங்கள் பாசமுள்ள அன்பு தாயை இழந்து வாடும்

**பிள்ளைகள்**

புதுவை.

## விண்ணக வாழ்வின் 40-ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம்:12-11-1964



மறைவு: 03-05-2018

A. **ஜில்பேர்**

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 11-06-2018 திங்கள் காலை 6.30 மணிக்கு உழவர்கரை புனித ஜெய ராக்கினி அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

பிரிவால் துயருறும்

**மனைவி: அதோல்பின் சம்தி**
**மகள், மகன், சகோதரர்கள், சகோதரிகள், உற்றார் உறவினர், நண்பர்கள்.**



திரு. S. பெர்னார்ட்

(Registrar of Births & Deaths (Rtd)

புதுவை நகராட்சி

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 25-03-1924 | 09-06-2011 |

# விண்ணக வாழ்வின் ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

**செபம்**

கருணையே உருவான எம் இறைவா! இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், அன்பின் ஊற்றாய் திகழ்ந்து இப்பூவுலகை விட்டு முடிவில்லா வாழ்வில் இளைப்பாற உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட

## திரு. S. பெர்னார்ட்

அவர்களது ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லாத பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி ஆமென்.

பிரிவால் துயருறும்

மனைவி: **ரோசாலி பெர்னார்ட்**

**மகள்கள், மருமகன்கள்,**

**மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,**

**மற்றும் கொள்ளுப்பேரப்பிள்ளைகள்**

**அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 9.6.2018 திருப்பலிகள்**

காலை 6.00 மணிக்கு, புனித அந்தோணியார் ஆலயம், முத்தியால்பேட்டை.

காலை 6.00 மணிக்கு, மற்றும் மாலை 5.00 மணிக்கும், புனித அந்திரேயா ஆலயம், ரெட்டியார்பாளையம்.

# விண்ணக வாழ்வின் முதல் ஆண்டு நினைவு அஞ்சலி



திரு. S. பேட்ரிக் ராஜன்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17-07-1966 | 10-06-2017 |

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" –யோவான் 11: 25

**ஜெபம்**

இரக்கம் நிறைந்த இறைவா ஆத்துமங்களை இரட்சிக் கிறவரே, உமது அன்பில் மூழ்கி இளைபாறுவதற்காக இம்மண்ணுலகிலிருந்து உம்மால் தெரிந்து கொள்ளப் பட்ட

## திரு. S. பேட்ரிக் ராஜன்

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றி யையும் முடிவில்லா பிரகாசத்தையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம். – ஆமென்.

பிரிவால் துயருறும்

மனைவி: திருமதி. ***லிதியா ராஜன்***

தாய்: ***எவான்ஜலின் ராஜன்***

மகள்கள், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்.

திருப்பலி: நாள் 10-06-2018 ஞாயிறு.

காலை 7 மணி, தூய சகாய மாதா ஆலயம், கோட்டுச்சேரி,

காலை 7.30 மணி, தேற்றரவு அன்னை ஆலயம், காரைக்கால்.

காலை 7.30 மணி, தூய இதய ஆண்டவர் பசிலிக்கா, பாண்டி.

காலை 8 மணி, புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயம், பாண்டி.

காலை 7 மணி, புனித ஆந்திரேயா ஆலயம், ரெட்டியார்பாளையம்.

காலை 8 மணி, புனித சூசையப்பர் ஆலயம், பெரும்பண்ணையூர்.

# விண்ணக வாழ்வின் 11-ஆம் ஆண்டு நினைவு

தோற்றம்: 02-05-1943



மறைவு: 11-06-2007

திரு. S. **ஜெயராஜ்** ஓய்வு பெற்ற ஆசிரியர்

"என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

11-6-2018 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இறையூர், புனித ஜெபமாலை அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்

அன்பு மனைவி திருமதி. C. **மேரி**

ஓய்வுபெற்ற ஆசிரியை

உடன் பிறந்தோர், மற்றும் உறவினர்கள்.

எறையூர்.



# ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி









**தோற்றம்**
13-06-1941

**மறைவு**
15-06-2009

# திருமதி. இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து

**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது." (1கொரி.15:42)**

அன்பு கொண்டே அனைவரையும் அரவணைத்தாய்!
பண்பு கொண்டே பாசத்தைப் பொழிந்தாய்!
இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து!
அணையா விளக்காய் – நீர்
இறவாமல் வாழ்கின்றீர் எங்கள் உள்ளத்தில்!
அன்பின் பாசத்தால் அருவியாய் கொட்டினீரே! என்றுமே,
இறை வாழ்வின் வெற்றிவாகை சூடநதியாக ஓடினீரே!
குன்றாத மலையாய் நின்றீரே, குடும்பத்திற்கே என்றுமே
பல்கலைக் கழகமாய் உயர்கல்வியில் வளர்த்தீரே!

அன்பே! உள்ளத்தில் வைத்து அனைவரையும்
ஆட்கொண்ட நீ அணையா விளக்காக எங்கள்
உள்ளத்தில் வாழ்ந்தாலும் இறைமகன் யேசுவின் அணையா
ஒளியில் அமைதியாய் என்றும் வாழ வேண்டுகிறோம்!
குடும்ப செபம் செபிப்பதிலும் ஆர்வமுடன்
புண்ணிய தலங்களுக்கு குடும்பமாய் சொல்வதிலும்
பக்தியாய் இருந்து விசுவாசத்தை வளர்த்தீர்
உந்தன் பராமரிப்புகளையும் அன்பினையும் மறக்க முடியுமா.

**"தாயே உத்தரிக்கும் தலத்தோர்க்கு ஓயா தஞ்சமும் ஆதரவும் நீயே"**

**திருமதி. இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து**

அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 15-06-2018 வெள்ளிக்கிழமை 16-06-2018 காலை 6.15 மணிக்கும், புதுவை, புனித ஜென்ம இராக்கினி மாதா பேராலயத்திலும், 15-6-2018 பகல் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், 15-6-2018 காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை ஜெபமாலை மாதா ஆலயத்திலும் திவ்ய பலிபூசை நிறைவேற்றப்படும். அன்னாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவும்.

பிரிவால் துயருறும்
**அன்னாரின் பிள்ளைகள்**
**குடும்பத்தினர், உறவினர்கள், பேரன், பேத்திகள், கொள்ளு பேத்தி, பேரன்**
**மற்றும் நண்பர்கள், பணியாளர்கள்.**
புதுவை.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதி அடைவார்களாக.**

✦ **திருநற்கருணை, தன்னல எண்ணங்களைச் சுட்டெரிக்கின்றது:** கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தம் பெருவிழாவாகிய இஞ்ஞாயிறு நண்பகலில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான திருப்பயணிகளுக்கு மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருநற்கருணை, நம் தன்னல எண்ணங்களைச் சுட்டெரித்து, இயேசுவோடு முழுமையாய் நம்மை ஒன்றிணைக்கின்றது என்று கூறினார். கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திருஇரத்தம் பெருவிழா, கிறிஸ்துவின் பேருண்மையில் வாழ்வதற்கு நம்மை அழைத்துச் சென்று, அவரில் நம்மை மாற்றுகின்றது என்றுரைத்த திருத்தந்தை, கிறிஸ்துவின் திருஉடல் மற்றும் திரு இரத்தத்தால் நாம் ஊட்டம் பெறுவதால், அவரின் அன்பைப் பெற்று, அதை நமக்கென்றே வைத்துக் கொள்ளாமல், மற்றவரோடு பகிர்ந்துகொள்கிறோம் என்று கூறினார். கடவுளின் அன்பைப் பெறுகையில், அவரின் திட்டம் உலகில் பிரசன்னமாக இருப்பதற்கு நம்மை உந்தித் தள்ளுகின்றது என்றும் வாழ்வில் தனிமையிலும், புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் வாழ்வோரை நாம் வரவேற்கின்றோம் என்றும், திருத்தந்தை கூறினார். கிறிஸ்துவின் திருஉடல் திருஇரத்தம் பெருவிழா ஞாயிறன்று, பல இடங்களில் பாரம்பரியமாக, திருநற்கருணை பவனிகள் நடைபெறுகின்றன என்பதைக் குறித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இப்பவனிகள், இறந்து உயிர்த்த இயேசு கிறிஸ்து உலகின் பாதைகளில் தொடர்ந்து நடக்கின்றார் மற்றும் நம்மோடு சேர்ந்து நம் பாதையை வழிநடத்துகின்றார் என்பதன் மிகச் சிறந்த அடையாளங்களாக உள்ளன என்றும் கூறினார். - வத்.வானொலி.

✦ **சவுதி அரேபியாவில் பெண்களுக்கு ஆதரவான புதிய சட்டம்:** சவுதி அரேபியாவின் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஒன்றாக பெண்களுக்கு ஆதரவான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசரான முகமது பின் சல்மான் அவர்கள், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை, குறிப்பாக பெண்களின் நலனுக்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். பெண்கள் வாகனம் ஓட்ட அனுமதி, விளையாட்டு மைதானங்களுக்குள் அனுமதி, திரையரங்குகளுக்கு அனுமதி உட்பட பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இந்நிலையில் பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான துன்புறுத்தல் செய்யும் நபர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், மூன்று இலட்சம் ரியால்கள் அபராதமும் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவையும் ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. இதற்கிடையே சவுதி அரேபியாவில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் அனைத்தும் தடைசெய்யப்பட வேண்டுமென, கடந்த மார்ச் மாதத்தில், ஐ.நா. மனித உரிமைகள் அவை கேட்டுக்கொண்டது கவனிக்கத்தக்கது. - Agencies

✦ Xuanhua **ஆயரின் விடுதலைக்காக ஹாங்காங் நீதி, அமைதி அவை:** சீனாவின் ஹெபெய் மாநிலத்தில் கைது செய்யப்பட்டுள்ள Xuanhau வாரிசு ஆயர் Augustine Cui Tai அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென, ஹாங்காங் நீதி மற்றும் அமைதி அவை, சீன அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது. இவ்வாண்டு ஏப்ரல் மாத மத்தியில், சீன அரசு அதிகாரிகளால் பிடித்துச் செல்லப்பட்ட ஆயர் Cui அவர்கள், எங்கு இருக்கின்றார் என்பது இதுவரை தெரியவில்லை எனக் கூறியுள்ளது, ஹாங்காங் நீதி மற்றும் அமைதி அவை. திருப்பீடத்தால் அங்கீகரிக்கப்பட்ட, சீனாவில் மறைந்து வாழும் திருஅவையைச் சேர்ந்தவரான ஆயர் Cui அவர்கள், விடுதலை செய்யப்படுவதற்கு, ஹாங்காங்கின் முன்னாள் ஆயர், கர்தினால் ஜோசப் ஜென் அவர்களும் தன் ஆதரவை வெளியிட்டுள்ளார். ஆயர் Cui அவர்கள், விசுவாசம் மற்றும் மனச்சான்றின் சுதந்திரத்திற்காக குரல்கொடுத்து வருவதால், அவர் நீண்டகாலமாக அடக்குமுறைக்கு உள்ளாகி வருகிறார். மேலும், சீன அரசின் சமயக் கொள்கைகள், விசுவாசக் கோட்பாடுகளை மீறுவதாக இருப்பதாக, அவற்றையும் ஆயர் புறக்கணித்து வருகிறார் என ஆசியச் செய்தி கூறுகின்றது. ஆயர் Cui அவர்கள், சடடத்திற்குப் புறம்பேயான மறைப்பணி நடவடிக்கைகளை ஆற்றுகிறார் என குற்றம் சாட்டப்பட்டு, 1993 ம் ஆண்டு முதல், கட்டாய வேலை, தடுப்பு முகாம், வீட்டுக்காவல், மறுகல்வி போன்ற தண்டனைகளை அவர் தொடர்ந்து அனுபவித்து வருகிறார். -- AsianNews.

✦ **தூத்துக்குடி: மரிக்காத மனிதநேயம்:** தூத்துக்குடிப் போராட்டத்தில் போலீஸ் உயர் அதிகாரிகள், உளவுத்துறை தோல்வி காரணமாகப் போராட்டம் வன்முறையாக வெடித்தது. போதுமான எண்ணிக்கையில் போலீஸாரைக் குவிக்காமல் போராட்டக்காரர்களுடன் கலவரம் மூண்டு 13 க்கும் மேற்பட்டோர் பலியானதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தப் போராட்டத்தில் பாதுகாப்புக்கு வந்த போலீசார் குறைவான எண்ணிக்கையில் இருந்ததால் போராட்டக்காரர்களிடம் சிக்கிக்கொண்டனர். தாங்கள் தப்பிக்க வழியின்றி ஒரு கடைக்குள் சென்று பதுங்கினர்; போராட்டம் நடத்தியவர்களில் சில இளைஞர்கள் அவர்களைத் தாக்கினர். ஆனால் போராட்டக்காரர்களில் பெரும்பாலானோர் அவர்களைத் தாக்க விடாமல் காத்து நின்று மீட்டனர். அவர்களை போலீசார் கையெடுத்துக் கும்பிட்டனர். இன்னோர் இடத்தில் கல்வீச்சில் காயம்பட்டு தலையில் ரத்தம் வழிய மயங்கிக் கிடந்த காவலர் ஒருவரை போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றனர். இன்னோர் இடத்தில் போராட்டத்தில் சிக்கி மயக்க நிலைக்குச் சென்ற 5-க்கும் மேற்பட்ட பெண் காவலர்களை பத்திரமாக மீட்டு அவர்களை ஓர் அறையில் ஓய்வெடுக்க வைத்து தண்ணீர் கொடுத்து, உபசரித்த மனித நேய நிகழ்வும் வாட்ஸ் அப்பில் வைரலாகி வருகிறது. துப்பாக்கிக் குண்டுகளையும், உயிரிழப்பையும் பரிசாகத் தந்த காவல்துறைக்கு மனித நேயத்தைப் பரிசாக அளித்து, நீங்கள் எங்களுக்கு எதிரியல்ல, எங்கள் சந்ததியின் உயிர்காகப் போராடுகிறோம் என்று மனித நேயத்தை உணர்த்திய தூத்துக்குடி மக்களின் மனித நேயம் போற்றத்தக்கதே. - நம்வாழ்வு.

✦ **இந்தியாவில் குழந்தை கடத்தல் அதிகரிப்பு:** இந்தியாவில் பெண் குழந்தைகள் கடத்தல் நிகழ்வும், மீட்கப்படாத சிறுமிகளின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருவது கவலை தருவதாக உள்ளது என, மனித உரிமை ஆர்வலர் ஒருவர் கூறியுள்ளார். அகில இந்திய அளவில் ஒவ்வொரு 15 நிமிடத்துக்கும் ஒரு சிறுமி பாலியல் முறையில் துன்புறுத்தலைச் சந்தித்து வருவதாகவும், கடந்த 2016ம் ஆண்டில் இந்தியாவில் குழந்தைகளுக்கு எதிராக, ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 958 குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளன எனவும், கடந்த 10 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, இந்த எண்ணிக்கை பலமடங்கு அதிகம் எனவும், ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இதில் 54 ஆயிரத்து 723 வழக்குகள் குழந்தை கடத்தல் சம்பவங்களுக்காகவும், 36 ஆயிரத்து 22 வழக்குகள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களுக்காகவும் பதிவாகியுள்ளன என, தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் சென்னை, கோவையை உள்ளடக்கிய 19 பெருநகரங்களில், குழந்தைகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக, கடந்த 2016ம் ஆண்டில் மட்டும் மொத்தம் 16 ஆயிரத்து 984 குற்றச் சம்பவங்கள் நடந்துள்ளன. இவற்றில் டெல்லி முதலிடத்திலும் (7392) மும்பை இரண்டாமிடத்திலும் (3400), பெங்களூரு (1333) மூன்றாமிடத்திலும் உள்ளன எனச் செய்திகள் கூறுகின்றன.

---

**சந்தாதாரர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

❄ சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு பதிப்பிக்க பத்து நாட்களுக்கு முன்னதாக பதியுங்கள்.

❄ 2018-2019 சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் உதவுங்கள். ***சந்தா எண்ணை*** தவறாமல் குறிப்பிடவும்.

- ஆசிரியர்.

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.